RESEARCH ARTICLE

DOI: 10.54392/ ijmrd2332

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

# Archaeologically known Town names in Pathupaatu

# தொல்லியல் நோக்கில் அறியலாகும் பத்துப்பாட்டின் ஊர்ப்பெயர்கள்

**S. Manimegalai [a,*]**

[a] Department of Tamil, Sacerd Heart College (Autonomoues), Tirupattur-635601, Tamil Nadu, India.

*Corresponding author Email: udhaijasmine@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2332

Received: 02-06-2023; Revised: 19-08-2023; Accepted: 28-08-2023; Published: 05-09-2023

**Abstract:** Names are symbols that have arisen to denote an object, a person, a place. Toponyms are names that distinguish a place from other places, just like a thing or a person. Place names or town names are very old. The idea that "place names must have originated when the human mind decided to live and take shelter in one place" is also worthy of discussion. The news we know through toponymy greatly supports the study of our historical, cultural and linguistic fields and without toponymy, research on history and culture cannot be considered complete. Among many sources like literature, charters, rhymes, and other folk references, the usefulness of the inscription is very great to know about town names. In that way, this article seeks to investigate the place names revealed through the inscriptions in Pathupaatu.

**Keywords:** Town names, Pathupaatu, Place names, Culture

**Language:** **Tamil**

## முன்னுரை

ஒரு பொருளை, ஒரு மனிதனை, ஓரிடத்தைக் குறிக்க எழுந்த குறியீடே பெயர்களாகும். பொருளையோ அல்லது மனிதனையோ தனித்தறியத் தனிப்பெயர்கள் அமைந்தன போன்று, ஓரிடத்தைப் பிற இடங்களினின்றும் பிரித்தறியத் தோன்றியனவே இடப்பெயர்களாகும். இடப்பெயர்கள் அல்லது ஊர்ப்பெயர்கள் மிகப் பழமை வாய்ந்தவை. "மனித மனம் ஓரிடத்தில் நிலைத்து வாழத் தொடங்கிய காலத்திலேயே இடப்பெயர்களும் தோற்றுவிக்கப் பெற்றிருத்தல் வேண்டும்" என்ற கருத்தானது இதுகாறும் சுட்டத்தக்கது.

இடப்பெயராய்வின் மூலம் நாம் அறியும் செய்திகள் நமது வரலாற்று, பண்பாட்டு, மொழியியல் துறைகைளைக் குறித்த ஆய்வுக்குப் பெரிதும் துணை புரிவதோடு இடப்பெயராய்வு இல்லையானால் வரலாறு, பண்பாடு குறித்த ஆய்வுகள் முழுமையடைந்தனவாகக் கருத முடியாத நிலையில் இடப்பெயராய்வு அமைகின்றது. ஊர்ப்பெயர் குறித்த கல்விக்கு நமக்கு உறுதுணையாவன பல மூலங்கள், இலக்கியங்கள், சாசனங்கள், நாணங்கள், பிற நாட்டார் குறிப்புகள் போன்றவற்றுள் கல்வெட்டின் பயன் மிகப் பெரியது. அந்த வகையில் பத்துப்பாட்டில் கல்வெட்டுகள் வாயிலாக வெளிப்படும் இடப்பெயர்களைக் குறித்து இக்கட்டுரையானது ஆராய முற்படுகின்றது.

## கதை சொல்லும் கல்வெட்டுகள்

"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்

கல்மேல் எழுத்துப் போல் காணுமே"

என்று தமிழ்ப் பிராட்டி ஔவையார் குறிப்பிடுவதலை பழங்காலத்தொட்டே தமிழகத்தில் கல்லில் எழுத்துகளைப் பொறிக்கும் வழக்கம் நிலவி வந்துள்ளது என்பதை அறியலாம். கல்லிலே

சிற்பங்களை மட்டும் செதுக்கி வைக்கவில்லை. பல அரிய செய்திகளை நிலைத்து நீடித்து நிற்கும்படிக் கல்லிலே வெட்டியுள்ளனர்.

கல்வெட்டுகள் நமது பண்டைத் தமிழரின் பண்பாடு, கொடை, வீரம், அரசாட்சி, நீதி போன்றவற்றை ஒரு காலக்கண்ணாடி போல் எடுத்துக்காட்டுகின்றன. இவை ஒரு நாட்டின் வரலாற்றிற்கு மிகவும் இன்றியமையாத சான்றுகளாகும்.

போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் நடும் வழக்கமிருந்ததைத் தொல்காப்பியம்,

“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்

சீர்த்த மரபின் பெரும்படை வாழ்த்தல் என்று

இருமூன்று மரபில் கல்லொடு புணர”

என்று குறிப்பிடுகின்றது (Subramanian, 1998).

நடுகற்களில் வீரனுடைய பெயரும் பெருமையும் குறிக்கப்பட்டிருந்தன என்பதை,

“நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்

பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்

பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்” (Jeyapal, 2004)

என்று அகநானூறும்,

“பெயர் பொறித்து இனி நட்டனரே கல்லும்” (Balasubramanian, 2004)

என்று புறநானூறும்,

“எழுத்துடை நடுகல்”

என்று ஐங்குறுநூறும் குறிப்பிடுகின்றன (Thatchinamoorthy, 2007).

செங்கம், தருமபுரி போன்ற இடங்களில் பல நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்று தாழ்த்தப்பட்டோரில் சிலர் வணங்கும் தெய்வங்களான மதுரை வீரன், இருளன், கறுப்பன், நொண்டி, முனீஸ்வரன், வேடியப்பன், ஐயனார், முதலியன நடுகல் வகுப்பைச் சேர்ந்தவை எனக் கருதலாம்.

தமிழ்நாட்டில் கோயில் இல்லாத ஊரே இல்லை எனலாம். ஊர் நிர்வாகங்கள் அனைத்தும் கோயில்களிலேயே நடைபெற்றன. அதனால் பல அரிய செய்திகளைத் தருகின்ற கல்வெட்டுகள் பெரும்பாலும் கோயில் சுவர்களிலேயேயும் மற்றும் ஊர்ப்புறத்தேயும், ஆற்றங்கரை ஓரங்களிலும் ஊரின் முக்கிய இடங்களிலும் காணப்படுகின்றன.

கல்வெட்டுகள் பெரும்பாலும் தமிழிலும் சமஸ்கிருதம் என்று வழங்கப்படுகின்ற வடமொழியிலும் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழியைத் தமிழ் எழுத்திலும் வடமொழியைக் கிரந்த எழுத்திலும் பொறித்துள்ளனர்.

“கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகளைப் பெரும்பாலும் 5 பகுதிகளாகப் பிரிப்பர்.

1. “கல்வெட்டின் தொடக்கம் - மங்கலவாசகம்
2. கல்வெட்டு எழுதப்பட்ட காலம்
3. கல்வெட்டுச் செய்தி
4. கையெழுத்துகள்
5. முடிவு அதாவது ஓம்படைக் கிளவி”

கல்வெட்டின் தொடக்கத்தில் “ஸ்வஸ்தி ஸ்ரீ” (மங்கலம் உண்டாகட்டும்) என்னும் சொல்தான் பெரும்பாலும் காணப்படுகின்றது.

## நடுகல் வழிபாடு

காதலையும் வீரத்தையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் நம்முடைய முன்னோர்கள். விழுப்புண் பெற்று இறப்பதையே ஒவ்வொரு வீரனும் விரும்பினான். சிறு குழந்தை இறந்தாலும் அதனை வாளினால் கீறித்தான் புதைப்பார்கள். இவ்வாறு வீரத்தைப் பெருமையாகக் கருதிய தமிழ்மக்கள் வீரத்தோடு போரிட்டு இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுத்து வழிப்பட்டனர்.

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை 500க்கும் மேற்பட்ட நடுகற்களை வடார்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் கண்டுபிடித்துள்ளது. இவற்றில் பெரும்பாலான நடுகற்கள் இன்றளவும் வழிபாட்டில் உள்ளன. மக்கள் இந்நடுகற்களைக் கடவுளாக எண்ணி வழிபட்டு வருகின்றனர். இவற்றிற்கு ஆண்டுதோறும் சிறந்த வழிபாடுகள், விழாக்கள் நடத்தப்படுகின்றன.

நடுகற்கள் வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், தருமபுரி முதலிய மாவட்டங்களில் "வேடிப்பன்" என்று அழைக்கப்படுகின்றன. இந்நடுகற்கள் இருக்கும் இடத்தை 'வேடியப்பன் கோயில்' என்று அழைகின்றனர்.

வேடர், கிருஷ்ணாரப்பன், மீனாரப்பன், சன்யாசியப்பன் என்று பல பெயர்களிலும் நடுகற்கள் அழைக்கப்படுகின்றன. சில இடங்களில் 'ஆஞ்சநேயர் கல்லு' என்றும் அழைக்கப்படுவது உண்டு.

"நிரை மீட்டான் கோயில்" என்பதையே "சிறை மீட்டான் கோயில்" என்று அழைகின்றார்கள் ஊமை வேடியப்பன், இரட்டை வேடியப்பன், சாவுமேட்டு வேடியப்பன், நத்தமேட்டு வேடியப்பன் எனப் பல பெயர்கள் காணப்படுகின்றன. ஒரு நடுகல்லில் வீரனின் காலின் கீழ் மாட்டின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அது மிகச் சிறியதாக முயல்போல் காணப்பட்டதால் அதனை 'மொச வேடியப்பன்' என்றழைக்கின்றனர்".

"மற்றொரு நடுகல்லில் வீரனின் காலின்கீழ் கல் உடைந்து காணப்படுகிறது. இதனை ஊரார் 'நொண்டி வேடியப்பன்' என்றழைக்கின்றனர்".

"வீரர்களுக்கு மட்டுமின்றி நாய், கோழி ஆகியவற்றிற்கும் நடுகற்கள் எடுத்து வழிபட்டுயுள்ளனர்.

இன்றும் தெலுங்கு மொழி பேசுகின்ற இராச கம்பளத்து நாய்க்கர், சக்கிலியர் முதலிய இனத்தவர்கள் இறந்தவர்களுக்குக் கல்நட்டு வழிபடுகின்றனர். இந்தக் கல்லிற்கு நீராட்டி, ஆடு, கோழி முதலியன பலியிட்டு வழிபடுகின்றனர்".

## அழகர் மலை

மதுரையிலிருந்து பதின்மூன்று கல் தொலைவில் அழகர் மலை இருக்கிறது. இஃது இப்பொழுது பெரும் பெயர் பெற்ற வைணவத் திருத்தலமாக இருக்கின்றது, சங்க காலத்தில் இந்த மலைக்குச் சோலைமலை, பழமுதிர்ச்சோலை, திருமாலிருஞ்சோலைமலை, இருக்குன்று என்று பல பெயர்கள் இருந்தன.

சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் கூறப்படுகின்ற திருமால் குன்றம் என்பது இந்த மலையே என்பதை,

"கடம்பல கிடந்த காடுடன் கழிந்து

திருமால் குன்றத்துச் செல்குவி ராயின்" (Subramaniyam, 2015)

என்னும் அடிகளால், திருமால் குன்றம் என்பது அழகர் மலையே என்று குறிக்கிறது. இடைக்காலத்தில் இந்த மலை இடபகிரி என்று பெயர் பெற்றிருந்தது. கடைச் சங்க காலத்தில் இந்த மலையில் கண்ணன் - பலராமன் என்னும் இரு பெருந்தெய்வங்களுக்குக் கோயில் இருந்தது.

அழகர் மலை என்பது திருமுருகாற்றுப்படையில் வரும் பாட்டைத் தலைவனான முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றாகும். "இம்மலையின் ஒரு பகுதியில் இயற்கையாய் அமைந்த குகைத்தளம் ஒன்று உள்ளது. இதைக் 'கிடாரிப்பட்டி' என்னும் ஊரில் இருந்து சுமார் மூன்று கல் தொலைவு நடந்து சென்றுதான் அடைய முடியும். மலையில் ஏறிப் பார்ப்பதற்கு வசதியாக படிகட்டுகள்

அமைத்திருக்கிறார்கள். இயற்கைக் குகைத்தளத்தில் படுக்கைகள் காணப்படுகின்றன. இங்கு நல்ல சுனை ஒன்றும் இருக்கிறது. படுக்கையிருக்கும் தளத்திற்கும், பாறை முகப்பிற்கும் உயரமானது மிக அதிகமாகும்.

முகப்பின் புறத்தே நீண்ட பண்டைய கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. படுக்கையின் ஓரத்திலும் ஒரு கல்வெட்டு உள்ளது. மேலே உள்ள கல்வெட்டுகள் மிகவும் உயரத்திலிருப்பதால் அதனைப் படிப்பது மிகவும் கடினமாகும்.

## கல்வெட்டு வாசகம்

1. மத்திரைய் பொன் கொலவன் ஆதன்அ தான
2. ............அனாகன் த.............
3. கணிநாகன் கணிய் நதன்
4. மத்திரைய் கே.......
5. ஊபு வணிகன் வியகன் கணதிகன்
6. கதை அதன் மகன் அதன் அ தான
7. ஸபமித இன் போ மித்தி
8. பணித வணிகன் நெடுமலன்
9. கொழுவணிகன் எளசந்தன்
10. .ஞ்சி கழுமாறன் தான
11. தார அணி இ கொடுபித அவன்
12. காஸபன் அ தவிர
13. அவரும் குடுபிதோ...
14. வெண்பளிய் அறுவை வணிகன் எளஅ அடன்
15. தியன் சந்தன்"

என்று கல்வெட்டு வாசகம் முடிவடைகிறது. இக்கல்வெட்டுகள் இடையில் பல பகுதிகள் தேய்ந்துள்ளன. ஆதலின் மேலே குறிப்பிட்டுள்ளவை தற்காலிகமாக படிக்கப்பட்டவையே இருப்பினும் இக்கல்வெட்டுகளிலிருந்து சிறந்த செய்திகள் கிடைக்கின்றன.

அழகர் மலையில் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டில்,

"மத்திரைய் பொன் கொலவன்"

என்னும் வாசகத்தில் 'மத்திரைய்' என்பது 'மதுரை' என்ற இடப்பெயரைக் குறிக்கிறது. அதே போன்று மதுரையைச் சூழ்ந்திருந்த எண்பெரும் சமணக் குன்றுகளில் அழகர் மலையும் ஒன்றாகும். "சங்க காலத்தில் அழகர் மலையின் ஒரு பக்கத்தில், சமண முனிவர்கள் இருந்தனர் என்றும் அவர்கள் இருந்த குகையும் அதிலுள்ள கற்படுக்கைகளும் பிராமி எழுத்துக்களும் 1910 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன. இந்தப் பிராமி எழுத்துக்கள் ஒன்பது தொடர் மொழிகளாக உள்ளன".

"மத்திரை பொன் கொலன்"

என்னும் கல்வெட்டு வாசகத்திற்கு டி.வி. மகாலிங்கம் அவர்கள் படித்துப் பொருள் கூறுகிறார். 'மத்திரை பொன் குலவன் அதன் அதன்' பொன் குலவன் என்பதன் பொருள் பொன் வாணிகன் என்றும், அதன் அதன் என்பது ஆதனுடைய மகன் அதன் என்றும், மதிரை என்பதற்கு (மதுரை)யில் இருந்த தபான் வாணிகன் அதன் உடைய மகன் அதன் இதைச் செய்தான், அதாவது.

"மதுரையைச் சேர்ந்த பல வணிகர்கள் இங்கு குறிக்கப்படுகின்றனர். 'பொன் கொல்லன்' 'உப்பு வணிகன்', 'அறுவை வணிகன்' (துணி வணிகன்), 'பணித வணிகன்' (சர்க்கரை வியாபாரி), 'கொழு வணிகன்' (இரும்பு வியபாரி) முதலியோர் குறிக்கப்படுகின்றனர். இதிலிருந்து மதுரையைச் சேர்ந்த பல செல்வந்தர்கள் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள் என்று தெரிகிறது".

இக்கல்வெட்டுகளுக்கு அருகில் பாறையில் தீர்த்தங்கரர் சிலை ஒன்றும், கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்றும் இருக்கின்றன.

'அருகர் மலை' என்பது 'அழகர் மலை' என்று மாறி இருக்கக்கூடும் என்று கொள்வதில் தவறில்லை.

ஆதன் ஆதன் கற்படுக்கையை அமைக்கக் கொடுத்த பொன்னின் மதிப்பு இவ்வளவு என்பது தான் இதனுடைய கருத்தாகும், மேலும் மதுரை என்ற இடத்தை,

"மிக்கு புகழ் உய்திய பெரும் பெயர் மதுரை

சினை தலை மணந்த சுரும்பு படுசெம் தீ" (Somasundarar, 2008)

"மகிழ் நனை மறுகின் மதுரையும் வறிதே அதாஅன்று"

என்னும் பாடலடிகளில் 'மதுரை' என்பது 'கூடல்' என்ற பெயரிலேயே பெரும்பாலும் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனை,

"மாடம் மலி மறுகின் கூடல் குடவயின்"

"மாடம் பிறங்கிய மலி புகழ் கூடல்

நாள் அங்காடி நன்மதலை கம்பதலை" (Somasundarar, 2008)

"மலி ஓதத்து ஒலி கூடல்

தீது நீங்க கடல் ஆடியும்"

என்ற பாடலடிகளில், மதுரை என்ற இடப்பெயரானது கூடல் என்ற பெயரிலும் வந்திருக்கிறது என்பது இதுகாறும் புலனாகின்றது. "மதுரைக்கு வடக்கே 24 கிலோமீட்டர் தொலைவில் வரலாற்றுச் சிறப்பும் வழிபாட்டுச் சிறப்பும் மிக்க அழகர் கோயில் உள்ளது. அழகர்கோயிலைச் சுற்றி அமைந்துள்ள கோட்டையின் பிரதான வாயிலுக்கு வெளியிலிருந்து கிழக்காக மேலூர் செல்லும் சாலையில் மலைத்தொடரின் அடிவாரத்தில் சுந்தராசன்பட்டி, கிடாரிப்பட்டி என்ற ஊர்கள் உள்ளன".

இக்குகைத்தளத்தில் செதுக்கப்பட்டுள்ள கற்படுக்கை ஒன்றிலும் குகையின் நெற்றிப்பகுதியில் வெட்டப்பட்டுள்ள நீர்வடி விளம்பின் மேலும் கீழுமாக தமிழ் - பிராமி கல்வெட்டுகள் உள்ளன.

சமணர்கள் இங்குத் தங்குவதற்கு முன்பு இவ்விடம் பழங்குடிகளின் வாழ்விடமாக இருந்திருக்க வேண்டுமென்பதை இக்குகைத்தள விதானத்தில் வரையப்பட்டுள்ள செங்காவியால் ஆன பறவைமுக மனிதர் மற்றும் மான் போன்ற விலங்குகளின் ஓவியங்கள் காட்டுகின்றன.

"இங்குள்ள சமணத் தீர்த்தங்கரரின் உருவமும் கி.பி. 9 - 10 ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டும், தொடர்ந்து இவ்விடம் 10 ஆம் நூற்றாண்டு வரை சமணர் வழிபாட்டுத் தளமாக விளங்கியமையை எடுத்துக்காட்டுகின்றன".

## அழும்பில்

மதுரைக்காஞ்சியில் அழும்பில் என்ற ஊர்ப்பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. "புதுக்கோட்டை ஊரில் உள்ள அம்புக் கோயில் என்ற ஊரே பழைய அழும்பில் என்ற கருத்தும் உள்ளது. இவ்வூரில் உள்ள சிவன் கோயில் 'அழும்பிற் கோயில்' என வழங்கி அதுவே நாளடைவில் அம்புக்கோயில் என மருவி ஊர்ப்பெயராயிற்று என்பர்". மேலும்,

"விளங்கு பெருந்திவின் மானவிறல் வேள்

அழும்பில் அன்ன நாடிழந் தனரும்" (Somasundarar, 2008)

என்னும் பாடலடிகளில் வரும் அழும்பில் என்னும் இடப்பெயரை "இராசராச வளநாட்டுப் பன்றியூர் நாட்டு அழும்பில்" என்று புதுக்கோட்டைக் கல்வெட்டுடொன்று குறிக்கிறது.

## நவிரமலை

நன்னன் சேய் நன்னனின் மலை நவிரமலையாகும். இம்மலையில் கோயில் கொண்ட தெய்வத்தின் பெயர் காரியுண்டிக் கடவுள் என்று மலைபடுகடாம் உரைக்கிறது.

இதனை,

"நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல்

பேரிசை நவிர மேஎ யுறையும்

காரி உண்டிக் கடவுள தியற்கையும்"

"வளம்பிழைப் பறியாது வாய்வளம் பழுநிக்

கழைவளர் நவிரத்து மீமிசை"

என்னும் பாடலடிகளின் இரு இடங்களில் 'நவிரம்' என்ற சொல் இடம்பெற்றுள்ளது. மேலும் நவிரமலை எது என்பதில் பல்வேறு குழப்பங்கள் உள்ளன.

மா. இராசமாணிக்கனார், சதாசிவபண்டாரத்தார் போன்றோர், "நன்னனது மலை நாட்டுப் படத்தைக் கொண்டு கூத்தர் தலைவர் கூறும் விவரங்கள், பொருந்துமாற்றை ஆராயின், எறத்தாழ ஒரு வழியைக் கண்டறியலாம். அவன் குறிப்பிடும் முதல் மலையே பர்வதமலை என்னும் நவிரமலை அது மூலைக்காட்டு மலையிலிருந்து வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் வெளியே தனிப்பட்ட அமைந்துள்ளது, மேற்கில் அதன் ஒரு சிறுபகுதி மூலைக்காட்டு மலையுடன் ஒட்டிக்கொண்டு இருக்கிறது, அச்சிறு பகுதி வழியாகவே எவரும் நவிரமலையிலிருந்து மேல் திசையில் சவ்வாது மலைகளுக்குப் போதல் இயலும்.

நவிரமலைக்கு வடக்கில் ஏறத்தாழ நான்கு கல் தொலைவில் 'பெரிய மலை' இருக்கின்றது, அதற்கு மேற்கில் தொடங்கும் மூலைக்காட்டு மலை தெற்காக வளைந்து பிறகு தென்கிழக்காகத் திரும்பி பர்வதமலையோடு பொருந்தியுள்ளது" என்பதிலிருந்து பர்வதமலையே நவிரமலை என்று இராசமாணிக்கனார் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் தற்போது, "பேராசிரியர் முனைவர் க. மோகன் காந்தி அவர்களின் ஆய்வு குழுவினரால் கண்டறியப்பட்ட நடுகல் கல்வெட்டு ஒன்று திருப்பத்தூர் வட்டாரத்திற்குட்பட்ட சவ்வாதுமலையின் புதூர் நாட்டிற்கு அருகாமையிலுள்ள கீழூர் என்ற ஊரில் கிடைத்துள்ளது. ஊரின் தென்மேற்குப் பகுதியிலுள்ள 'வேடன் கல்' என்னும் நடுகல்லில் கீழ்க்கண்ட கல்வெட்டு வாசகம் இடம் பெற்றுள்ளது.

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீராஜாதிராஜ தேவற்க்கு யா
2. ண்டு முப்பதாவது பங்கள நாட்டு
3. நவிரமலை நரைவிளையுடை
4. ய கயிலாயன் மோட் (டு) கவறை
5. கள் ஐயநு
6. ம் நரைவிலை
7. உடைய கெ
8. த்தன் குடல
9. ந்நும்
10. இவ்வூர்வி ( )

11. ஊரன
12. மக்குவழ
13. க்காடி வ
14. ழக்கழி
15. ய நாட
16. ....றி யப
17. ட்டமை
18. க்கு கன்
19. நாடு

என்ற கல்வெட்டு வாசகம் இடம் பெற்றுள்ளது.

மேலும் புதூர் நாட்டிலுள்ள சந்தைக்கு அருகே பெரிய பலாமரத்தடியில் இரண்டு பக்கங்களிலும் எழுத்துப் பொறிப்புடன் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது.

அதன் வாசகம் பின்வருமாறு,

1. ஸ்ரீ மது கொட
2. லையில் மயணார
3. சகரல அத்தி வருஷ
4. ம் ஐப்பசி மாதம் பத்தொ
5. ன்பதாம் தியதி நவிரமலை
6. முழலை நாதனுக்கு புது ஊ
7. ர் சர்வ மானியம் விட்ட
8. படி கல்லும் காவேரியும்
9. புல்லும் பூமியும் உள்ளன.
10. வும் யிதுக்கு அகிதம் பண்
11. ணினவன் கெங்கை கரையி
12. ல் குரால் பசுவை கொன்ற பா
13. வத்தே போவான்.

என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது. மேலும் குலோத்துங்கச் சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்று மேல்பட்டு என்னும் ஊரில் கிடைத்துள்ளது.

சவ்வாது மலையிலுள்ள புதூர் நாட்டிற்குட்பட்ட மேல்பட்டு என்னும் ஊரில் ஆநிரைக்காக போரிட்ட போது இறந்த வீரன் ஒருவனுக்கு நடுகல் எடுத்துள்ளனர், இந்நடுகல்லின் தொடக்கம் "சிங்க விண்ண பருமற்கு" (சிம்ம விஸ்ணு) என்று தொடங்குகிறது. பல்லவர்களின் நேரடி அரசியலில் இந்த மலை இருந்ததை அறிய முடிகிறது, மேலும் கீழூர் பகுதியைச் சேர்ந்த மற்றொரு நடுகல் கல்வெட்டு கேத்தன், குட்டேற்றன் ஆகிய இருவரும் ஊரைக் காக்கப் போரிட்டு உயிர் விட்ட செய்தியை வெளிப்படுத்துகிறது இந்தக் கல்வெட்டு வாசகம்,

ஸ்வஸ்திஸ்ரீ,

ஸ்ரீ ராஜாதி ராஜ தேவற்கு,

யாண்டு முப்பதாவது

பங்கள நாட்டு நவிரமலை.......

இக்கல்வெட்டுப் பல்லவர்களுக்குப் பிறகு பிற்காலச் சோழர்களின் ஆளுகையின் கீழ் இம்மலை இருந்ததை வெளிப்படுத்துகிறது, குறிப்பாக ராஜாதிராஜனின் முப்பதாவது ஆட்சி ஆண்டில் இப்பகுதி பங்களநாடு என்னும் பிரிப்பு முறையில் இருந்குள்ளது. ராஜாதிராஜனைத் தொடர்ந்து வந்த குலோத்துங்கச் சோழனின் கல்வெட்டு ஒன்று சோழர்களின் அரசியல் நுண்மாண் நுழைபுலத்தை அறிந்து கொள்ளத்தக்கச் சான்றாய் விளங்குகிறது.

சேம்பரை என்னும் மலை உச்சி கிராமத்தில் 5 அடி உயரத்தில் இக்கல்வெட்டு உள்ளது. குலோத்துங்க சோழனின் 49 வது ஆட்சியாண்டில், ஜயங்கொண்ட சோழ மண்டலத்தில், தென் பங்கள நாட்டில் அமைந்துள்ள வேழநாட்டில் நவிரமலை இருந்தது என்று இக்கல்வெட்டு வாசகம் கூறுகிறது. கல்வெட்டு வாசகம் வருமாறு,

"ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்து

ங்க சோழ தேவற்கு யா

ண்டு 49 ஆவது ஜயங்

கொண்ட சோழ மண்டல

த்து பங்கள நாட்டு தெற்கில்

வகைமேல் வேழநாட்டு

நவிரமலை புனா நாடுடையன்ஞ்

என்று தொடர்கிறது. தற்போது அரசியல் சூழலில் நாட்டை நல்லாட்சி புரிய ஆட்சியாளர்கள் மாவட்டம், வட்டம், நகரம், கிராமம் என்று பிரித்து ஆட்சி புரிவதற்கு சோழர்களே முன்னோடிகள் என்று இக்கல்வெட்டு வெளிபடுத்துகிறது.

இக்கல்வெட்டில் வரக்கூடிய ஜயங்கொண்ட சோழ மண்டலம் என்பது தற்போதைய தமிழ்நாடு போன்றதாகும். பங்களநாடு என்பது மாவட்டத்தைப் போன்றதாகும். தெற்குப் பற்களநாடு என்பது ஒரு மாவட்டத்தை அடையாளப்படுத்த வேண்டி வடக்கு, தெற்கு என்று பிரிப்பது போன்றதாகும். பங்களநாட்டை மூன்று கூறுகளாகச் சோழர்கள் பிரித்திருந்தனர். வடக்குப் பங்களநாடு என்பது வேலூரும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகளையும், நடு பங்களநாடு என்பது போளூரும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும், தெற்குப் பங்களநாடு என்பது செங்கமும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் குறிக்கும். இக்கல்வெட்டில் வரக்கூடிய பங்கள நாட்டுத் தெற்கில் என்பது செங்கம் பகுதியைக் குறிக்கிறது. இந்த தெற்குப் பங்கள நாட்டில் வேழநாடு இருந்துள்ளது.

"வேழநாடு என்பது யானைகள் மிகுந்த நாடு என்பது பொருள்படும். பொதுவாக சேரநாடு (கேரளம்) வேழமுடைத்து என்று சொல்வது மரபு. ஆனால் செங்கத்திற்கு மேற்காக உள்ள சவ்வாதுமலையை வேழநாடு என்று குறித்துள்ளனர். இம்மலை முழுவதும் யானைகள் நிறைந்திருந்த சூழலைக் காரணப்பெயரோடு பிரிப்பு முறை வெளிபடுத்துகிறது.

பத்துப்பாட்டு நூலான மலைபடுகடாம் என்னும் நூல் இப்பகுதியை மையப்படுத்தி எழுதப்பட்ட நூலாகும். மலை என்பது யானையையும் கடாம் என்பது யானையின் பிளிறலையும் உருவகப்படுத்தும். மேலும் வேழநாட்டில் நவிரமலை இருந்ததை இக்கல்வெட்டு எடுத்துரைக்கிறது.

இக்கல்வெட்டு அழகாக நாட்டுபிரிப்பு முறையைப் பதிவு செய்துள்ளது.

1. ஜயங்கொண்ட சோழ மண்டலம்
2. தெற்குப் பங்களநாடு (செங்கம் பகுதி)
3. வேழநாடு
4. நவிரமலை (சவ்வாதுமலை)

குலோத்துங்கனின் 49 ஆவது ஆட்சியாண்டில் தமிழகப் பகுதிகள் இவ்வாறாகப் பிரிக்கப்பட்டிருந்தை அறிய முடிகிறது.

இதில் பயின்று வந்துள்ள நவிரமலை என்ற சொல்லாட்சி தமிழ் ஆராய்ச்சியில் புத்தொளியைப் பாய்ச்சியுள்ளது. ஏனெனில் சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான "மலைபடுகடாம்" என்னும் நூல் நன்னன் சேய் நன்னன் என்ற குறுநில மன்னின் ஆளுகையின் கீழ் நவிரமலையும், சேயாறும் இருந்தது என்று பெயர் மருவி வழங்கலாகிறது. நவிரமலை என்பது போளூர்க்கும் செங்கத்திற்கும் இடையே நிற்கும் பருவதமலை என்ற கருத்துப் பரவலாக தமிழ் ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் நிலவி வந்த நிலையில், நவிரமலை என்பது திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட புதூர் நாடு, புங்கம்பட்டு நாடு, நெல்லிவாசல் ஆகிய மூன்று நாடுகள் அடங்கிய மலைத்தொடரே என்று இக்கல்வெட்டுத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

பண்டைய அரசர்களின் அரசியல், மற்றும் நிர்வாக வசதிக்காகப் பயன்படுத்தப்பட்ட நாட்டு பிரிப்பு முறைகள் தற்காலம் வரை தொடர்வது பண்டைத் தமிழரின் அரசியல் நிருவாகத்தைத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

இங்கு நவிரமலை பற்றி ஒரு முடிவக்கு வருவதற்கு இக்கல்வெட்டுச் செய்திகள் துணைபுரிகின்றன. மலைபடுகடாம் (கி.பி.2) இராஜாதிராஜன் (கி.பி.1048) கி.பி. 17 ஆகிய நூற்றாண்டுகளில் சவ்வாதுமலையின் மேற்குமலைகள் (திருப்பத்தூர் வட்டாரம்) நவிரமலை என்ற பெயரில் வழக்கில் இருந்துள்ளது. பிற்காலத்தில் பருவதமலையை நவிரமலை என்றழைக்கும் வழக்கம் ஏற்பட்டுள்ளது நோக்கத்தக்கது".

மலைபடுகடாம் நவிரமலையில் 19 வகையான ஓசைகள் கேட்பதாகக் கூறுகிறது. பல மலைவாணர் குடியிருப்புகளும் 19 வகையான ஓசைகளும் பருவதமலையில் இருப்பதற்கு வாய்ப்புகளே இல்லை. நீண்ட மலைத் தொடரான சவ்வாதுமலையே நன்னனின் செங்கண்மாவைச் சூழ்ந்துள்ளது. இதனை பெருங்கௌசிகனார் "குன்று சூழ் இருக்கை நாடு கிழவோனே" என்று கூறி மலைபடுகடாமை முடிக்கிறார். எனவே கல்வெட்டுச்சான்றுகளைக் கொண்டு நவிரமலை என்பது செங்கத்தின் மேற்கேயுள்ள வளையம்பட்டு தீத்தாண்டாப்பட்டு, வலசை, பரமனந்தால் ஊர்களைச் சூழ்ந்து பயணிக்கும் நீண்ட மலைத்தொடரேயாகும்.

## முடிவுரை

கல்வெட்டு காலத்தின் கண்ணாடி போன்றது. கல்வெட்டுகள் ஒவ்வொரு காலத்திலும் நடந்த சமூக மாற்றங்கள், சமய வாழ்க்கை, அரசியல் எழுச்சி, நீதி, பொருளாதாரம், துயர், மகிழ்ச்சி, சமூக ஒப்பந்தங்கள், வரிவிதிப்பு எனப் பல்வேறு துறைகளைக் குறித்தச் செய்திகளைத் தாங்கி நிற்பவையாகும். சில கல்வெட்டுகள் செய்யுள் வடிவிலும் அமைந்துள்ளன. சில வட்டார வழக்குகளைத் தாங்கியும் நிற்கின்றன. கல்வெட்டுகள் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் அமைந்துள்ளன. அழகர்மலையைக் குறிப்பிடும் 'மத்திரைய்' எனத் தொடங்கும் கல்வெட்டு 'மதுரை' என்ற இடத்தைக் குறிப்பதாகவே கருதப்படுகிறது. இலக்கியங்களில் மதுரை 'கூடல்' என்ற பெயரிலும் பதிவு செய்யப்பட்டதை ஆராய முடிகிறது. நவிரமலை என்ற மலை தற்போது திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட சவ்வாதுமலை என்று உறுதிப்படுத்தக்கூடிய மூன்று கல்வெட்டு கிடைக்கப்பெற்றுள்ளன.

## References

Balasubramanian, K.V. (2004) Purananuru Moolum Uraiyum, New Century Book House, Chennai, India

Jeyapal, R, (2004) Agananuru Moolum Uraiyum, New Century Book House, Chennai, India

Somasundarar, P. (2008) Maduraikanchi, Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India

Subramanian, S.V. (1998) Tolkappiyam, Manivasakar Publishing House, Chennai, India

Subramaniyam, S.V. (2015) Silappathikaram, Gangai Puthaga Nilayam, Chennai, India

Thatchinamoorthy, A., (2007) Ainkurunuru, New Century Book House, Chennai, India.

**Funding**

No funding was received for conducting this study.

**Conflict of interest**

The Author have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

S. Manimegalai, Archaeologically known Town names in Pathupaatu, Indian Journal of Multilingual Research and Development, Vol 4, Iss 3, (2023) 10-19. DOI: https://doi.org/10.54392/ijmrd2332